தமிழ் இணையக் கல்விக்கழகம்
சென்னை - 600 025.

இளநிலைத் தமிழியல் - பட்டம் **(B.A. TAMILOLOGY - Degree)**

மூன்றாம் ஆண்டு – ஐந்தாம் பருவம்

நேரடி எழுத்துத் தேர்வு **(OFF - LINE WRITTEN EXAMINATION)**

நவம்பர், திசம்பர் - **2015**

**D011** பண்டைய இலக்கியம்

காலம் : 3 மணி நேரம் மதிப்பெண்கள் : 75

(குறிப்பு : பிரிவு - 1இல் இருந்து எல்லா வினாக்களுக்கும் விடை தர வேண்டும். விடை ஒன்றிற்கு ஒரு மதிப்பெண். பிரிவு - 2இல் இருந்து ஐந்து வினாக்களுக்கு விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் ஒரு பத்திக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 3 மதிப்பெண்கள். பிரிவு - 3இல் இருந்து மூன்று வினாக்களுக்குக் கட்டுரை வடிவில் விடை தர வேண்டும். ஒவ்வொரு விடையும் 3 பக்கங்களுக்கு மிகாமல் அமைதல் வேண்டும். விடை ஒன்றிற்கு 15 மதிப்பெண்கள்.)

பிரிவு - 1

ஒரு சொல் / தொடரில் விடை தருக. **(15x1=15)**

1. வரைவு கடாதல் என்பதன் பொருள் என்ன?
2. இயற்கைப் புணர்ச்சி எவ்வாறு நிகழும்?
3. விரிச்சி கேட்டல் என்பது யாது?
4. ஔவையார் தம் பாடல்களில் மதித்துப் போற்றிய புலவர்கள் யாவர்?
5. நெய்தல் திணைக்குரிய உரிப்பொருளினைக் கூறுக.
6. மஞ்ஞை என்பது எதைக் குறிக்கும் சொல்?
7. கற்பு வாழ்க்கையில் ஏற்படும் பிரிவுகளில் மூன்றினை எழுதுக.
8. இடந்தலைப்பாடு என்றால் என்ன?
9. நத்தத்தனார் யாழின் சிறப்பை எங்ஙனம் குறிப்பிட்டுள்ளார்?
10. உவமை எத்தனை அடிப்படைகளில் பிறக்கும்? அவை யாவை?
11. யாருடைய வீரமும் போர்க்கருவிகளும் கொல்லன் உலைக்களத்தில் கிடக்கின்றன?
12. முரசு எத்தனை வகைப்படும்? அவை யாவை?
13. வலிமை பொருந்திய ஓவியர் குடியில் பிறந்த மன்னன் யார்?
14. தன் வாழ்நாளில் பெரும்பகுதியைப் போர்க்களத்திலேயே கழிப்பவன் என்னும் சிறப்புக்குரியவர் யார்?
15. ஏமவாழ்க்கை என்றால் என்ன?

## பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு ஒரு பத்தி அளவில் விடை தருக.**
**(5x3=15)**

1. அன்னை கூறிய புன்னையின் சிறப்பை நற்றிணைப் பாடல் வழி விளக்குக.
2. “செம்புலப் பெயல் நீர் போல
   அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே”- உவமையை விளக்குக.
3. கூடலூர் கிழார் பாடலின் வழி தலைவி இல்லறம் நடத்தும் சிறப்பினைக் கூறுக.
4. ஐங்குறுநூறு பாடல் ஆசிரியர்களை எழுதுக.
5. ஆற்றுப்படை நூல்கள் எத்தனை வகைப்படும்? அவை யாவை?
6. எயிற்பட்டினம் குறித்து சிறுகுறிப்பு வரைக.
7. புறநானூறு காட்டும் போர் நெறிமுறைகளைக் கூறுக.
8. நாள் மகிழ் இருக்கை – வரையறை செய்க.

## பிரிவு - 3

**மூன்று பக்கக் கட்டுரை வடிவில் விடை தருக.** **(3x15=45)**

1. (அ) நற்றிணையில் இடம்பெறும் கபிலரின் குறிஞ்சிப் பாடல்கள் குறித்தெழுதுக.

   (அல்லது)

   (ஆ) ஐந்திணைக்குரிய முப்பொருள் குறித்து கட்டுரை வரைக.

2. (அ) அகநானூற்றுப் பாடல் வழி அறியலாகும் அகப்பொருள் மாந்தர்களை விவரிக்க

   (அல்லது)

   (ஆ) சிறுபாணாற்றுப்படை வாயிலாக அறியப்படும் கடையெழு வள்ளல்களின் சிறப்புகளை தொகுத்தெழுதுக.

3. (அ) சங்க இலக்கியங்களுள் புறநானூற்றின் சிறப்பினை சான்றுடன் விளக்குக.

   (அல்லது)

   (ஆ) பதிற்றுப் பத்தில் ஐந்தாம் பத்தின் வாயிலாக அறியப்படும் வரலாற்றுக் குறிப்புகளைத் தொகுத்தெழுதுக.

***